
# சுட்டி




..வம்பர் '89

102

FREE E - BOOKS , www.thamizham.net.,

..ு.1

# எந்தப் பற்பசை பயன் படுத்துவது?

திருச்சியில் உள்ள நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம், கடைகளில் மிகுந்து விற்கப்படும் 5 பற்பசைகளை முறையாக ஆய்ந்து சில உண்மைகளை வெளியிட்டுள்ளது:

❁ பற்பசைகளின் தரத்தில் ஒவ்வொன்றிற்கும் பெரிய வேறுபாடு ஏதும் இல்லை.

நுகர்வோர் சொந்த விருப்புகளால் இவை தேர்ந்தெடுக்கப்படுகின்றன. மிக அதிகமான முறை பயன் படுத்தலாம், என்று சில பற்பசை நிறுவனங்கள் விளம்பரப்படுத்துவது கூட உண்மையாக இல்லை.

பற்பசை எத்தனை "பிரஷ்" களுக்கு வரும்? என்ன விலை?

| | 50 கி | 100 கி | 200 கி | 50 கி விலை ரூ. | ஒரு பிரஷ் அளவு விலை (காசு) |
|---|---|---|---|---|---|
| கால் கேட் | 38 | 66 | 130 | 5 00 | 13.1 |
| குளோஸ். அப் | 45 | 89 | — | 6. 50 | 14 4 |
| பிராமிஸ் | 38 | 72 | 97 | 4. 75 | 12 5 |
| சிக்னல் | 28 | 58 | — | 4. 90 | 12 8 |
| போர்ஹான்ஸ் | 38 | 79 | 114 | 5 25 | 18.1 |

மேலும் சில உண்மைகளை இச் சங்கத்தினர் கண்டறிந்துள்ளனர்:-

❁ 50 கி பற்பசைகளில் பிராமிஸ் தான் நுகர்வோர்க்கு லாபகரமானது; சிக்னல் சிக்கனமற்றது. 100 கி டியூபுகளில் போர்ஹென்ஸ் (1பிரஷ் - 11காசு) லாபகரமானது சிக்னல் விலை மலிந்தது (17காசு)

❁ 100 கி பற்பசை, 50 கி மாதிரி இரு மடங்கு வரும் என்று நினைத்தால் ஏமாறுவோம். 50 கி கால் கேட் 38 பிரஷ்களுக்கு வருகிறது; ஆனால் 100 கி கால்கேட் 66 பிரஷ்களுக்கே வருகிறது. அதே சமயம் போர்ஹான்ஸ் 50 கி, 100 கி முறையே 38, 79 பிரஷ்களுக்கு இருமடங்கைவிட மிகுந்துவருகின்றது.


❁ ஒரே பற்பசையின் ஒரே அளவுள்ள இருடியூபுகளையே ஆய்ந்து பார்த்ததில், அவற்றிடையே 15 பிரஷ் அளவு வரை வேறுபாடு ஏற்படுகிறது. கால் கேட்டைப் பொறுத்தவரை இது மிகவும் உண்மையாக இருக்கிறது.

விளம்பர மயக்கத்திலிருந்து விழித்துக்கொண்டு, உண்மைகளை உணர நுகர்வோர் முன் வர வேண்டும்.

தகவல்: சண்டே - புஸ்பாணன்

❁ இதுவரை வாழ்ந்து மடிந்த மக்களின் மொத்த எண்ணிகை 11,000 கோடியாகும்.

FREE E - BOOKS , www.thamizham.net.,



# உங்கள் ஓட்டு யாருக்கு?

★ ★ அட்டைப்பட கருத்தே, தேர்தலைப் பற்றிய 'சுட்டி'யின் கருத்து பணக்காரர்கள் மட்டுமே பங்கெடுக்கக்கூடிய இப் 'பண' நாயகப் பாராளுமன்ற அரசியலமைப்பில் 'சுட்டி'க்கும் நம்பிக்கையில்லை.

★ ★ ஆனாலும் மிகப் பெரும்பான்மையான மக்கள் தேர்தலில் வாககளிக்கிறார்கள் என்பதே உண்மை! இந்நிலையில், அப்படி வாக்களிக்கக் கூடிய மக்களுக்கு நாம் யோசனை சொல்வதில் தப்பில்லை.


★ ★ இரண்டு அணியினர் மீதும் லஞ்சக் குற்றச் சாட்டுகள் ஏராளமாக உள்ளன. லஞ்சம் மட்டுமில்லை வேறு வகையான எல்லாக்குற்றச் சாட்டுகளுக்குமே இரு பக்கங்களிலும் இடமுண்டு.

❀ ❀ அப்படியென்றால் யாருக்கு ஓட்டு? ஒரே ஒரு வழி இருக்கிறது. நிலையான ஆட்சி வேண்டும் என்ற மாயையில் மக்கள் சிக்கக் கூடாது. ஒரே ஆள் திரும்பத்திரும்ப ஆட்சிக்கு வருவதும், நிலையான ஆட்சியைத் தருவதும் தான் தேசத்திற்கு அதிகமான கெடுதல்! ஆட்சி அதிகாரம் மாறி மாறி வழங்கப் படும் போது தான் ஆள்கின்றவர்களுக்குப் பயம் இருக்கும். பயம் இருக்கின்ற வரையில் தான், சிறிதாவது தேசத்திற்கு நன்மை செய்வார்கள்.

❀ ❀ ஆகவே, யாருக்கு ஓட்டுப் போடக் கூடாது என்பதில் மக்கள் கவனம் செலுத்த வேண்டும். அப்படிக் கவனம் செலுத்தினால், ராஜீவ்காந்தியின் தலைமையிலான இ. காங்கிரஸ் கட்சிக்கு இந்த முறை ஓட்டுப் போடாமல் இருப்பது நல்லது என்பது புலனாகும்!

FREE E - BOOKS , www.thamizham.net.,

## சுட்டி 101 வது இதழ் வெளியீட்டு விழா



சுட்டி 100 வது இதழை எதிரொலித்து, "உரத்த சிந்தனை" அமைப்பினர், சுட்டி ஆசிரியர் குழுவினரோடு ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சி நடத்தினர். அதில் 3 மாத ஓய்விற்குப் பின் மலரும் புதிய சுட்டியின் 101 வது இதழைத் தாங்கள் ஒரு வெளியீட்டு விழாவாக நிகழ்த்தும் விருப்பைத் தெரிவித்தனர்.

எளிமையாக இதனை நடத்த ஆசிரியர் குழுவினர் வேண்டியதன் பேரில் சென்னைக் கடற்கரை உழைப்பாளர் சிலையருகே 7-10-89 அன்று மாலை 101 வது இதழ் வெளியீட்டு விழா நிகழ்ந்தது. கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களும, நடிகர் வி. கோபாலகிருஷ்ணன் அவர்களும் இதழை வெளியிட்டு உற்சாக உரை நிகழ்த்தினர். உரத்த சிந்தனை அமைப்பாளர் உதயம் ராம் அவர்கள் "சமூக அக்கறையுடைய 'சுட்டி' உற்சாகப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் 'உரத்த சித்தனை' அமைப்பு தொடர்ந்து செயல்படும்" என்று குறிப்பிட்டார். "பல கடைகளில் சுட்டி வெளியே தொங்க விடப்படாமல் இருப்பினும், வாசகர்கள் கடைக்காரர்களிடம் கேட்டு வாங்குமளவுக்கு, வாசகரிடம் தாக்கத்தை சுட்டி ஏற்படுத்தியிருந்தது. இன்று மக்களிடையே பிரபலமாகியுள்ள பல சமூக உணர்வுடைய ஏடுகளுக்குச் சுட்டி வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும், விளங்கியுள்ளது" என்று சுட்டிக் காட்டினார் கவிஞர் தமிழன்பன்

அன்று நடைபெற்ற கடற்கரை புத்தகச் சந்தையில், உரத்த சிந்தனை தோழர்கள் உற்சாகத்துடன் சுட்டியை விற்றும், சந்தா சேர்த்தும் ஆதரவளித்தனர் சுட்டிக்குத் தோள் கொடுக்க முன் வந்த இந்த கள்ளம் கபடமற்ற நேர்மையான இளைஞர்களின் அன்பிற்கும், ஆதரவிற்கும் சுட்டி இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.


### சுட்டி முன் இதழ்கள்

100 மாத சுட்டி இதழ்களில் நீங்கள் படிக்காமல் விட்ட முன் இதழ்களையும் படிக்கலாமே! இதழ் எண்கள் - 1, 3, 4, 5, 7, 9, 19, 21, 22, 70 தவிர மற்ற 90 இதழ்களை அனுப்ப இயலும். இதழுக்கு 50 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பண விடை (M. O) அனுப்பினால் அஞ்சலில் வந்து சேரும் மொத்தமாக 90 இதழ்களையும் பெற ரூ 40/- அனுப்பினால் போதும்



மூலதனம் என்ற நூலை எழுத காரல் மார்க்ஸ் படித்த நூல்களின் எண்ணிக்கை: 1485

FREE E - BOOKS , www.thamizham.net.,



## ஆயுத பூஜை அபாயங்கள்!

"கடவுளுக்கு மட்டும் தான் பூஜை என்று இல்லை" ஜடப்பொருட்களுக்கும் — அவை பிழைப்புக்கு உதவுவதால் நம் நாட்டில் பூஜை செய்கிறார்கள், வருடா வருடம் மேலும் மேலும் சிறப்பாகச் செய்கிறார்கள். இதனால் வருடம் ஒரு முறை வாகனங்களும் அலுவலகங்களும் சுத்தமடைவதாக நாம் சமாதானமடைந்து விட முடியாது காரணம்—

இந்தப் பூஜைகளால் சுத்தமடைவது கடைகள் அல்லது அலுவலகங்கள்! அசுத்தமடைவது பொதுச் சொத்தான சாலைகள்!

ஆயுத பூஜையன்று பல தெருக்களில், கடைகளை அலங்கரித்து விட்டு, திருஷ்டிசுற்றி, அந்தப் பூசணிக்காயை நடு ரோடில் போட்டு உடைத்து விட்டு, வேலையைக் கவனிக்கத் தொடங்கி விடுகிறார்கள்.

இதனால் சென்னையில் இரு இடங்களில், இவ்வொண்டு பூசணிக்காயால் இருசக்கர வாகனங்கள் இரண்டு தடம் புரண்டன. ஏற்கனவே குண்டும்—குழியுமாய் இருக்கும் சாலைகளில், நூல்மேல் நடப்பது போல ஓட்டிவரும் வாகன ஓட்டிகள், சிறிது கவனக் குறைவால், உடைந்தபூசணித் துண்டுகளின் மேல் ஏற்றிவிட வண்டி வழுக்கி ஓரம் போய் விழுந்தது ஓட்டிவந்த ஓட்டுநர் காயமடைந்தார். உடனே மருத்துவமனைக்கு ஓட்டம்

தங்களுடைய கடைக்குத் திருஷ்டி சுற்றிப் போடும் கடைக்காரர்கள், உடைத்த பூசணிக்காயைக் கொஞ்சம் ஓரம் தள்ளினால் என்ன? இதை எவரும் செய்ய மறுக்கிறார்கள். பஸ் போன்ற பெரிய வாகனங்கள் உடைத்த பூசணித் துண்டுகளின் மேல் ஏறினால் ஒன்றும் ஆகாது. ஆனால் சிறிய டயர்களை உடைய இரு சக்கர வாகனங்கள் ஏறினால் வண்டி கவிழ்ந்துவிடும்.

இனிமேல் இப்படி நடு ரோடில் உடைக்கப்படும் பூசணிக்காய்களை அகற்றாவிட்டால் அக்கடைக்காரருக்குத்தண்டனைக் கிடைக்கும் என்று அரசு ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும். காவல் துறையும் அக்கடைக்காரர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் இவர்களால் ஏற்படும் விபத்துக்களால், இருசக்கர வண்டி ஓட்டுநர்களைக் காப்பாற்ற மருத்துவர் அல்லவா தன் ஆயுதங்களை எடுக்கிறார். இது தேவையா?

-எஸ். வி. ராஜசேகர்,

---

❀ இன்று உலக மக்கட்தொகை 500 கோடி. இதனை அடைய 1, 00, 000 ஆண்டுகள் ஆயின. இதை இரட்டிப்பாக்க 40-50 வருடங்கள் போதும்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# டி. ராஜேந்தரும், சங்கராச்சாரியாரும்

அரசியல் எப்படியெல்லாம் அசிங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு, அண்மையில் நடந்தேறிய டி. ராஜேந்தர் நாடகமும் சாட்சியாக இருக்கிறது.

10,000 பேருக்கு இலவச அரிசி என்று ஆரம்பித்து, தமிழக அரசை எதிர்த்து உண்ணாவிரதம், கைது, விடுதலை என்று பல காட்சிகள் அரங்கேறின. ('இலவசம்' என்கிற வார்த்தையால், இன்னும் எத்தனை பேர் தமிழ் மக்களை அவமதிக்கப் போகிறார்களோ) தமிழக மக்களின் மேல் திடீரென்று பாசம் பொங்கி, டி. ராஜேந்தர் உண்ணாவிரதமிருக்கத் திட்டமிட்டது ஒரு பக்கமிருக்க, அதற்கு எதிராக 'உண்ணும் விரதம்' என்னும் மகா மோசமான கோமாளிக்கூத்தும் நடைபெற்றது. எல்லாம் அரசியல் — எப்படியாவது மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்கும் அரசியல்!

இந்தக் கேவலமான அரசியலில், காஞ்சிபுரம் சங்கராச்சாரியும் டி. ஆருக்கு ஆதரவாகத் தன் பங்குக்கு ஒரு அறிக்கை விட்டு 'ஸ்டண்ட்' அடித்திருக்கிறார். அந்த அறிக்கையைச் சுவரொட்டியாக அடித்து (ஒரு பக்கம் ராஜேந்தர் இன்னொரு பக்கம் சங்கராச்சாரியார்) வீதிமுழுவதும் ஒட்டியிருந்தார்கள். இந்த 'ராஜேந்தர்- தி. மு. க அரசியலில்' இவருக்கென்ன வேலை என்று நமக்குப் புரியவில்லை!

ஒரு நண்பர் சொன்னார் — 1982 ஆம் வருடம். ஏதோ ஒரு சமூகக் காரியத்திற்காகக் காஞ்சி மடத்தை அணுகி, அறிக்கைவிடச் சொன்னபோது பெரியவர் அமைதியாகப் பதில் சொன்னாராம், "நீங்க சொல்றதெல்லாம் சரி. ஆனாலும் இதெல்லாம் ஸ்ரீமடத்தின் காரியமில்லை" என்று!

நம்முடைய 'ஸ்டண்ட்' சாமியாருக்கு, டி. ராஜேந்தர் கைதான விஷயம் கூட, ஸ்ரீ மடத்தின் முக்கியமான காரியமாகியிருக்கிறது.

வேண்டாமென்று சொல்லவில்லை- சாமியார்களும் கட்சி அரசியலுக்கு வரட்டும்! ஆனால், அப்புறம் எதிர்கட்சிக்காரர்களின் வசவுகளையெல்லாம் வாங்கிக்கட்டிக் கொள்ளத்தான் வேண்டியிருக்கும், ஆசிரமம், இந்துமதம், புனிதம் என்னும் வார்த்தைகளையெல்லாம் சொல்லித் தப்பிக்க முடியாது;


—கறுப்புச் சட்டை

---

❁ குளிரை நுகரும் உறுப்புகள்: மூக்கு நுனி, விரல் நுனி, முதுகின் நடுப்பாகம்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## விபத்துக்களை விளைவிக்கும் தொலைக்காட்சி



★ ★ ★

தொலைக்காட்சியில், இரவு 9.30 மணிச் செய்தியில், அண்மையில் ஒரு நாள் இப்படிச் செய்தி வாசிக்கப்பட்டது!

தீபாவளிப் பண்டிகையையொட்டிய வெடி வியாபாரத்தில், வில், அம்பு வெடிகளே அதிகம் விற்பனையாகின்றன. இந்த வெடிகளினால் பல ஆபத்துகள் உண்டாகின்றன. குறிப்பாகப் பல குழந்தைகள் கண்பார்வையை இழந்துவிடும் ஆபத்து பெருகி வருகிறது. இந்த அம்புக் காயத்தால் பாதிக்கப்பட்டு, மதுரை அரவிந்தர் கண் மருத்துவ மனையில் மட்டும் இதுவரை 60 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். இராமாயணம், மகாபாரதம் ஆகிய தொலைக்காட்சித் தொடர்களின் விளைவாகவே, இவ் வெடிகளில் குழந்தைகள் ஆர்வங்காட்டுகின்றனர் என்பது தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக, வேறு சில அறிவிப்புகளையும் அரசிடமிருந்து நாம் எதிர்பார்ப்பது இயற்கை தானே! எதிர்பார்த்தோம் — ''உடனடியாக இந்த வில், அம்புகள் தடைசெய்யப்படும்'' என்றோ, ''குழந்தைகளின் கண்களைப் பாதிக்கும் இராமாயண, மகாபாரதக்காட்சிகள் சிலவேனும் நீக்கப்படும் ''என்றோ, அறிவிப்புகள் வருமென்று! ஆனால் அப்படி எந்தத் தடை உத்தரவையும் அரசாங்கம் வெளியிடவில்லை.

அப்படியானால், வெறும் புள்ளி விவரம்தரும் தகவல் நிலையந்தான் அரசாங்கமா? மக்கள் நலனில் எந்த அக்கறையும் அரசுக்குக் கிடையாதா? விபத்துகளின் எண்ணிக்கையையும், விபத்துக்களுக்கான காரணத்தையும் அறிவித்துவிட்டு, மௌனம் சாதித்தால் என்ன அர்த்தம்? எவனுக்குக் கண்கெட்டால் நமக்கென்ன என்று இருப்பதற்கு, ஒரு அரசாங்கம் தேவையா?


பெற்றோர்களாவது பிள்ளைகளின் கண்களைக் காப்பாற்ற முயற்சி செய்தால் நல்லது. வில், அம்பு வெடிகளை வாங்கிக் கொடுத்து அவர்களின் கண்களைக் கெடுக்காமலும், மகாபாரத, ராமாயணத் தொடர்களைப் பார்த்து மூட நம்பிக்கைகளை வளர்த்துக் கொள்ளாமலும் இருக்க எத்தனை பெற்றோர்களால் முடியும்?

—பழனி

---

❀ நுணுக்கமான ஒலிகளைக் கேட்டு அறியும் காது இடக் காது தான்.

FREE E - BOOKS , www.thamizham.net.,



## தொடக்கக் கல்வி இயக்ககம் திணறுகிறது!

தொடக்கக்கல்வியை மேம்படுத்துவதாகக் கூறி, பள்ளிக் கல்வி இயக்ககத்திலிருந்து தொடக்கக்கல்வி இயக்ககத்தைப் பிரித்தார்கள்!

இதனால் வளர்ச்சியும் மேம்பாடும் ஏற்பட்டிருக்கிறதா? இன்னும் மோசமாகியிருக்கிறது! பள்ளிக் கல்வி இயக்ககத்தில் 6 பேர் செய்யும் பணியினைத் தொடக்கக் கல்வி இயக்ககத்தில் ஒருவர் செய்கிறார்.

தொடக்கக்கல்வி இயக்குநருக்கும் அவரது அலுவலருக்கும் தரப்பட்டுள்ள இடவசதி 3000 சதுர அடிகள்; இவர்கள் எண்ணிக்கையோ 7 தாம். ஆனால் இங்குள்ள 60 ஊழியர்கள் பணியாற்ற அளிக்கப்படும் இட வசதி வெறும் 1500சதுர அடிகளே. இந்தக் குறுகலான இடத்தில் உட்காரக் கூட இடமின்றி மூச்சுத்திணறும் இவர்கள் ஒழுங்காக வேலை செய்வது எவ்விதம்?

தமிழகம் முழுவதும் உள்ள தொடக்கப்பள்ளிகளைப் பராமரிக்கும் இந்த இயக்ககத்திற்குத் தனி ஆவணக் காப்பறை இல்லை; முடிக்கப்பட்ட பழைய கட்டுகள் அந்தந்த ஊழியரின் காலடிகளில் சீரழிந்து கொண்டிருப்பதை நேரில் பார்த்தால் நெஞ்சு வலிக்கிறது.

ஆயிரக்கணக்கானவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய இந்தஇயக்ககத்திற்குச்சொந்தமாகத் தனி படி பெருக்கி எந்திரமோ, போதுமான எழுது பொருட்களோ இல்லை. அவசரமாக அனுப்பப்பட வேண்டிய கடிதங்களைக் கூட, பள்ளிக்கல்வி இயக்ககத்திற்கு அனுப்பப்பட்டு, அங்குள்ள ஊழியர்களின் தயவைப் பெற்ற பின், பல மாதங்கள் தாமதமாக அனுப்பப்படுகின்றன. அவசர பதில்களை எதிர்நோக்கி ஏங்கிக்கொண்டிருப்போரின் நிலை அந்தோ பரிதாபம்!

தொடக்கக்கல்வி இயக்ககத்தின் மூச்சுத்திணறலுக்குக் கல்விச் செயலரும், தொடக்கக்கல்வி இயக்குநரும் பொறுப்பேற்றுப் பதில் சொல்லியாக வேண்டும்? போதிய இடவசதி, ஊழியர் எண்ணிக்கை, பிற வசதிகளைப்பற்றிக் கவலைப்படாமல் தொடக்கக் கல்வி இயக்ககத்தைப் பிரித்துக் குட்டிச் சுவராக்கியவர்களைத் தட்டிக்கேட்க நேரமிருக்குமா இந்த அரசுக்கு?

-லீலாவதி

---

❁ இந்திய ராணுவம் 1746 இல் சென்னையில் தாம் முதலில் தோற்றுவிக்கப்பட்டது. தோற்றுவித்தவர். ராபர்ட் கிளைவ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

ஆக்கப்பூர்வமான சாதனை:

## 100 நாளில் எழுந்தறிவு 100%

எழுத்தறிவின்மை நம் தேசிய அவமானம். விடுதலை பெற்று அரை நூற்றாண்டை நெருங்கும் நாட்டில் இன்னும் 65 % கல்லாதவர்கள் என்பது வேதனையானது! மக்களுக்கு அரசுகள் இழைத்த மாபெரும் அநீதி இது!

இதுவரை மக்களின் எழுத்தறிவின்மையைத் துடைக்க உருப்படியான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. தீவிர முயற்சி எடுத்தால் இது சாத்தியமானது என அண்மையில் கேரள மாநில ஆட்சியாளர்கள் சிலர், நிருபித்துள்ளனர்.

2-10-89 அன்று இந்தியாவின் 100 % எழுத்தறிவுள்ளவர்கள் (வயது 5-60) வாழும் நகரம் என்ற சிறப்பைக் கோட்டயம் பெற்றுள்ளது. இது எப்படி சாத்தியமானது?

எர்ணாக்குளம் மாவட்ட ஆட்சியாளர் கே ஆர். ராஜன் மாவட்டம் முழுவதும் எழுத்தறிவுபரப்பும் தீவிர திட்ட மொன்றை முடுக்கி விட்டார். இதற்கு ஒரு மாதத்திற்குப்பின் பக்கத்து மாவட்டமான கோட்டயத்தின் ஆட்சியாளர் அல்போன்ஸ் கண்ணன்தானம் "மக்கள் எழுத்தறிவு கல்வி த்திட்டம்" என்ற ஒன்றை துவங்கி, தம் மாவட்டத்திலும் இப்பணியை இன்னும் தீவிரமாகச் செயல் படுத்தினார். கோட்டயம் நகரில் முதல் வெற்றி கிடைத்தது!

கோட்டயத்தின் 68,823 மக்களில் 2209 பேர்கள் படிக்காதோர். படிக்காதோரில் பாதிபேர் படிக்க மறுப்பவர்கள். இவர்களையெல்லாம் சரிப்படுத்தி நூறே நாட்களில் இவர்களை அறிவு வெளிச்சத்திற்குக் கொண்டுவர, கோட்டயம் மகாத்மா காந்தி பல்கலைக் கழகத்தைச் சார்ந்த 700 தேசிய மாணவர் படையினர், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பொது நல நிறுவனங்கள் அனைவரும் கைகோத்துப் பாடுபட்டனர். 32 வட்டங்களில், வீடு வீடாகப் புகுந்து அறியாமை இருட்டை விரட்டி அடித்தனர்.

கற்கத்தயங்கியவர்கள் இன்று கையெழுத்துப் போடுவதையும் பத்திரிகை தலைப்புகளைப் படிக்க முடிவதையும் உணர்ந்துப் பூரித்துப்போகின்றனர். புதுப்படிப்பாளி கிருஷ்ணன் குட்டி கவிதை எழுதக் கூட முயல்கிறார்.


8-9-90உலக எழுத்தறிவு நாள்! அதற்குள் 72% எழுத்தறிவு உடைய கேரளத்தை 100% எழுத்தறிவு பெற்றோர் மாநிலமாக மாற்றத் தீவிர முயற்சி நடந்து வருகிறது! அண்டைய தமிழகம் விழிக்குமா?

—ஸ்டெனிஸ்லாஸ்

❀ விபத்துகள் குழந்தைகளிடம் அதிகமாக ஏற்படும் வயது: 11

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி



❀ சுட்டியின் 101 வது இதழ்கண்டேன். கடந்த 100 இதழ்களின் நோக்கும், போக்கும் தொடர்வது மகிழ்ச்சிக்குரியது. தமிழ்க்கல்வி இயக்கம் பற்றிய எழிலின் கோபம்" எல்லோருக்கும் ஏற்பட வேண்டிய ஒன்று. அன்னை தெரசா செய்வது சரியா என 'நிலா' நெருப்பைச் சிந்தியுள்ளது சிந்திக்கச் செய்கிறது. அட்டைக்கு ஜெ... ஆடம்பரம் ஏன்?...

—கவிஞர் வெற்றிப்பேரொளி, திருக்குவளை

[ஓவியர் ஜெயராஜ், சுட்டியின் ஆடம்பரத்திற்காக ஜெ... அட்டை போடவில்லை கருத்திலும், பணியிலும் ஆர்வங் கொண்டு, தம் ஒத்துழைப்பைத் தர முன் வந்துள்ளார். சுட்டியின் அட்டையை அமைத்துத்தரும் உதவியை அவர் ஏற்றுள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆர்]

❀ "சான்றோர் செய்யும்தவறுகள், கொடுமைகள் யாவும் சாகும் போதுமடிந்தே போகும்" என்பதையே இராதாகிருஷ்ணனின் மனைவிக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் இடித்துக் காட்டின. அய்ன்ஸ்டைனும், பிள்ளையாரும் கட்டுரையில் 1872 செக்ஷன்களில் பிள்ளையாரையே மடக்கி விடுகிறோமா! நன்றாக விளக்கி இருக்கலாமே. ரமேஷ் பிடித்தது பிள்ளையாரையா? குரங்கையா? புரியவில்லை.

கே. டி. மூர்த்தி, வேலூர்

❀ "ஈக்கு ஈமச்சடங்கு" ஈயைப்பற்றி அறிந்து கொள்ள உதவியது. கவலை தரும்கல்லூரித்தேர்தல் கல்லூரிகள் அரசியல் தலைவர்களை உருவாக்கும் ஓரிடமாக இருப்பதை நினைத்து நான் வருந்தும் கருத்தினை மிக அழகாக ஸ்டெனிஸ்லாஸ் எழுதியுள்ளார். பாராட்டுக்கள்,

—வலம்புரி லேனா. குளித்தலை

❀ அன்னை தெரசா செய்யும் தொண்டு ஏழைகளின் இன்றைய அவலத்தைத் துடைக்கவே அல்லாமல் அவர்களை நிரந்தர ஏழைகளாக வைத்திருக்க அல்ல. வையமே அன்னையின் உயிர்க்காக வேண்டும் வேளையில் 'நிலா'வின் பொருளற்ற கேள்வியைச் சுட்டி வெளியிட்டிருக்க வேண்டாம்.

—எஸ் ஜோசப், பிலான்பூர்

❀ பல மசாலா இதழ்களுக்கிடையே சுட்டியைப் பார்க்காதது படிக்காதது மனதிற்குப் பெருங்குறையாகவே இருந்தது. மூன்று மாத இடைவேளைக்குப் பிறகு வந்த சுட்டியைக் கண்டதும் "மழைமுகம் கண்ட பயிரைப் போலவும், தாய்முகம் கண்ட குழந்தையைப் போலவு"ம் அக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

—புதுச்சேரிநாகி, பாண்டிச்சேரி

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தவறாக-- ஜப்பானில் குண்டு வீச்சு!

செய்தித் தொடர்பு-உலகின் உயிர் நாடி! இது பலவீனப்பட்டால் விபரீதங்கள் விளையும். உலகைக் குலுக்கிய ஹிரோஷிமா அணுகுண்டு வீச்சு நிகழ்ந்தது தவறான மொழிபெயர்ப்பால் என்பது பலருக்குத் தெரியாது!

இரண்டாம் உலகப்போரின் இறுதிக்கட்டத்தில் போட்ஸ்டாம் மாநாட்டினை அடுத்து, ஜப்பான் அரசைச் சரணடையுமாறு பணித்து, அமெரிக்க அரசு இறுதி எச்சரிக்கை (Ultimatum) அனுப்பியது.

அதற்கு ஜப்பானிய அரசு அனுப்பிய பதிலில் "மோகு ஸட்ஸு" என்ற ஜப்பானியச் சொல் பயன்படுத்தப்பட்டிருந்தது "உங்கள் இறுதி எச்சரிக்கையைப் பரிசீலனை செய்து வருகிறோம்: பதில் சொல்வதற்குத் தாமதமாகும்" எனப் பொருள்படும் வகையில் இச்சொல் பயன்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் வாஷிங்டனில் கிடைத்த தகவலில் இச்சொல்லுக்கு "உங்கள் இறுதி எச்சரிக்கையை நிராகரிக்கிறோம்" எனப் பொருள் படும்படி மொழிபெயர்க்கப்பட்டுவிட்டது. மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட இத்தவறு ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்களின் மீது அமெரிக்காவை அணுகுண்டு வீசச்செய்துவிட்டது.

தகவல்: மணவை முஸ்தபா

## எமக்கு வந்தவை

சுகந்தச் சுரங்கள் (3.00) நடைமுறைச் செய்திகள் நந்தவனக் கவிதையாய் வடிக்கப்பட்டுள்ளன கவிஞர் சுதன். வெளியீடு: சுகன் பைந்தமிழ தடாகம், 97, கீழ்த்தெரு, கணபதி நகர், தஞ்சாவூர்-613001

நேர் முறைத் தமிழ் (4.00) வரிவடிவம் குறைப்பு—, எழுத்துக் குறைப்பு— குறில் நெடில் குறைப்பு—32 எழுத்தில் எழுதிப்படிக்கும் முறை. ஆக்கம்: க. நா கிருஷ்ணமூர்த்தி 33, பெரிய சௌராஷ்டிரா தெரு, திருச்சி -620 008. தொகுப்பு- பா.இறையரசன் விரிவுரையாளர் புட்பம் கல்லூரி, பூண்டி.

சட்டங்கள் நமக்காக நம்மைக் காக்க எண்: 12, 13, 14 ஜீவனாம்சம்—நிலங்கள், நிலப்பட்டா, வீட்டு மனைப்பட்டா பற்றி வழிகாட்டிக்குறிப்புகள்- விவாகரத்து, விலை: இல்லை. கிடைக்குமிடம்: சட்டக் கல்வி மற்றும் உதவி நிறுவனம், 15 இராமலிங்க நகர், பழைய மகாபலிபுரம் சாலை, கொட்டிவாக்கம், சென்னை -600 041

ஆசிரியர்: மு ஷேக், வெளியிடுபவர்: கி.இராமச்சந்திரன், அச்சிடுபவர் எம். எஸ். ரவீந்திரன் ரவீந்திரன் பிரஸ், 137, நடேசன் ரோடு, சென்னை-600 005 முகவரி: 1494, அண்ணாநகர், சென்னை 600 040

FREE E - BOOKS , www.thamizham.net.,

# THE HINDU
## தெ ஹிந்து

[சுட்டியில், ஏழு ஆண்டுகட்கு முன்னால், (மே-1982, இதழ்: 16) பத்திரிக்கைகள் பற்றிய விமர்சனத்தொடரில் "இந்து" பற்றி வெளிவந்த கட்டுரையின் சில பகுதிகளை இப்போது வெளியிடுவது பொருத்தமாக அமைகிறது]

சகல விஷயங்களிலும் தினத்தந்திக்கு நேர் இந்து. மடடோ செத்ததை மூன்றாம் பக்கத்தில் எங்கோ இரண்டு வரிகள் போட்டுவிட்டு, ஷோபா மரணத்தை முதல் பக்கத் தலைப்பாகக் கொண்டாடும் தினத்தந்தி- ஆனால் ஹிந்துவோ பாரதிதாசன் செத்தால்கூட எங்கோ ஒரு மூலையில், எங்கோ ஒரு கிழக்காப்பிரிக்க நாட்டுக் கவிஞர் செத்தது போல ஒரு மூலையில் அந்நியமாக இரண்டு வரி வெளியிடும்

முந்தின நாள் டி. வி. வானொலி செய்திகளைக் கேட்டால் போதும், மறு நாள் ஹிந்துவைப்பார்க்கத் தேவையில்லை 70 பைசாவுக்கு நேற்று, நேற்று முதல் நாள் செய்திகளைக் கொடுக்கும்! சுயேட்சையாளர் கையில் இருக்கும் அரசாங்க வாணி; அரசாங்கதர்சன் தான் ஹிந்து!

ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன? நமக்குத் தொழில் ஆள்வோரைத் தொழுதல் என்ற ஒரே கொள்கையைக் கடைப்பிடிக்கும் ஹிந்து, இந்தியா முஸ்லீம் நாடாக மாறிய மறுநாள், 'தி முஸ்லீம், என்று பெயர் மாற்றிக் கொண்டாலும் ஆச்சரியமில்லை.

1948 க்கு முன் பெருமுதலாளி கோயங்காவின் இந்தியன் எக்ஸ்பிரசும, தினமணியும் பலமுறை தடை செய்யப்பட்டன. ஆனால் குட்டி முதலாளி நடத்தும் இந்து ஒரு போதும் அரசாங்கத்தின் எதிர்ப்பைச் சந்தித்ததே இல்லை. வெள்ளையரின் ஆத்திரத்தை ஒரு போதும் சம்பாதித்ததேயில்லை. எனவேதான் குதிரை வண்டியில் போய்க் கொண்டிருந்த பத்திரிகை பார்சல்கள், சொந்த விமானத்தில் ஏற்றிச் செல்லுமளவுக்கு வியாபாரத்தை உயர்த்த முடிந்தது.

சமுதாயப் பார்வையுடைய எழுத்தோ, வெட்ட வெளிச்சமான உண்மையோ, அது ஆளும் வர்க்கத்தை இடைஞ்சல் செய்யுமானால் இந்து அதனை அறவே புறக்கணிக்கும், சற்று முற்போக்கான முறையில் எழுதவும், செயல்படவும் கஸ்தூரி குடும்பத்தைச் சேர்ந்த திரு. ராம் முன் வந்தார். அவரைத் தாங்கிக் கொண்டால் விற்பனை பாதிக்கப்படும் எனப் பயந்து, முக்கிய நிர்வாகப் பொறுப்பை அவரிடமிருந்து எடுத்து, அமெரிக்காவிற்கு அவரை அனுப்பி விட்டது நிர்வாகம்'

❀ 1958 வரை இந்துவின் முதல் பக்கம் முழுவதும் விளம்பரமே வெளிவரும். ஒரு செய்தியும் இராது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## இந்து ராம் மெக்சேசே விருது பெறுவாரா?

இந்து நாளிதழின் இணை ஆசிரியர், என். ராம் இந்திய இதழியல் வரலாற்றில் தம் முத்திரையைப் பதித்துள்ளார். ஒரு கட்டுப்பெட்டிப் பத்திரிகையிலிருந்து இப்படியொரு நெருப்பு மனிதர் தோன்றியிருப்பது காலத்தின் கட்டாயமாகும்.

மிதவாத இதழாக இந்துவை மாற்றிய கஸ்தூரி ரங்க ஐயங்காரின் பேரர்கள் தாம் நரசிம்மனும், ஜி. கஸ்தூரியும். தற்போதைய ஆசிரியராக ஜி. கஸ்தூரியும், இணை ஆசிரியராக நரசிம்மனின் முதல் மகன் ராமும் உள்ளனர். ராம் சென்னைப்பல்கலைக் கழகத்தில் தங்கப்பதக்கத்துடன் எம். ஏ வரலாறு முடித்துவிட்டு, அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் இதழியல் பட்டம் பெற்றவர்.

அறுபதுகளில் அமெரிக்காவில் நிகழ்ந்த போர்-எதிர்ப்பு முழக்கங்களும், இன எதிர்ப்புப் போராட்டங்களும், இவரைப்பாதித்து, இவர் சிந்தனையைத் தடம் மாற்றின. மைய அமைச்சர், ப. சிதம்பரமும், இடது கம்யூனிஸ்ட்டு மைதிலி சிவராமனும் இவருடன் அமெரிக்காவில் உடன் பயின்றவர்கள். பின்னர் தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பி. எச்டி ஆய்வு மேற்கொண்ட காலத்தில் தான் இவரது இடது சாரி சிந்தனைகள் மலர ஆரம்பித்தன, இடது சாரி தலைவர்களான பி. சுந்தரய்யாவும் ஏ. கே. கோபாலனும் இவர் வாழ்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியவர்கள்.

இந்து இதழின் வாஷிங்டன் நிருபராக இவர் பணியாற்றிக் கொண்டிருந்த போது தான் இவர் பெயர் இதழ் உலகில் தெரிய வந்தது அனைத்துலக நிதி நிறுவனத்திலிருந்து 5 பில்லியன் உதவியை இந்தியா ரகசியமாகப் பெற்ற விவரத்தை அப்போது அம்பலப்படுத்தினார்.

இந்து இதழின் பெரிய குடும்பத்தில் ராமும் அவரது தாயாரும் இரு தம்பிகளும் சேர்த்து 25 % பங்குகளுக்கு உரியவர்கள். ராமின் தீவிரப் போக்கினால, அரசு இவ்விதழுக்குப்பல சங்கடங்களை அளிக்கும் எனவே வணிக நலன் பாதிக்கப்படும்; எனினும் மக்கள் நலன் கருதி ராம் ஆற்றிய இதழியல் சேவைக்கு இவ்வாண்டு மெக்சேசே விருது வழங்கப் பரிந்துரைக்கப்படலாம் என்று சில இதழாளர்கள் கருதுகின்றனர்.

—எழில்

❀ மகாத்மா காந்தி இறந்த செய்தியை இந்து இதழ், உள் பக்கத்தில் ஒரு கள [Single column] செய்தியாகவே வெளியிட்டது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## உலகப்பொது மொழி: எஸ்பிரன்டோ

உலகத்திற்குப் பொதுமொழி இல்லை எனவே 1887 இல் போலந்தைச் சார்ந்தவ லுட்விக் சாமன் ஆஃப் என்ற இளம் மருத்துவர் செயற்கையாக ஓர் உலக மொழியைத் தாமே உருவாக்கினார். இதற்கு "எஸ்பிரன்டோ" என்று பெயரிட்டு வார்சாவில் இந்த மொழியைப் பற்றிய கையேடு ஒன்றை 26-7-1887 இல் வெளியிட்டார். உலகம் முழுவதும் உள்ள மக்கள் ஒருவருக்கொருவர், தொடர்பு கொள்ள முடியாத அவஸ்தையை, இந்தப்புதுமொழி ஒழித்துக் கட்டும் என்றார்.

அவர் நினைத்த அளவுக்கு இம்மொழி உலகமெங்கும் செல்வாக்குப் பெறமுடியாவிடினும், பல தடைகளைக் கடந்து இன்று உலகில் 1½ கோடி மக்களால் பேசப்படுகிறது, பைத்தியங்களின் மொழி என்று ஏளனப்படுத்தபட்டு, நாஜிகளாலும் ஸ்டாலினாலும் தொல்லைகளுக்கு உட்படுத்தப்பட்ட இம்மொழி அழியாமல் வளர்ந்து அண்மையில் நூற்றாண்டைக் கொண்டாடியது.

26-7-87 அன்று வார்சாவில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் 60 நாடுகளிலிருந்து வந்திருந்த 6000 மக்கள், மொழிபெயர்ப்பாளர்களின் உதவியின்றித்தங்களுக்குள் சரளமாகப் பேசினர்.

இம்மொழி ரோமானிய எழுத்து முறையில், எழுதுவது போலவே உச்சரிக்கப்படுகிறது. 10 அடிப்படை இலக்கண விதிகள் எளிமையாக அமைந்துள்ளன. தேவையற்ற குழப்பங்கள் இல்லை. இன்று உலகில் 625பள்ளிகளிலும் அமெரிக்காவிலும்சீனாவிலும் சில கல்லூரிகளிலும் கூட சொல்லிக்கப்படுகிறது 30,000 நூல்கள் இம் மொழியில் இது வரை வெளிவந்துள்ளது. ஆண்டுக்கு 200 நூல்கள் மொழிபெயர்க்கப்படுகினறன. 100 பத்திரிக்கைகள் எஸ்பிரன்டோ வில் நடத்தப்படுகின்றன. அண்மையில் ஆங்கிலேயர் ஒருவரால் எழுதப்பட்ட எஸ்பிரன்டோ நாடகம்பிரஞ்சு-பல் கேரிய நாடகக்குழுவினரால்நடிக்கப்பட்டு புகழ் பெற்றது.

இதுவரை எந்த நாட்டின் அரசியல், பொருளாதார ஆதரவும் இன்றியே வளர்ந்து வரும் இம்மொழிக்கு ஒரு புது நம்பிக்கை கணிப்பொறியால் பிறந்துள்ளது. மொழிகளிடையே மொழிபெயர்ப்பு செய்ய குழப்பமற்ற எஸ்பிரன்டோ மொழி சிறந்த பாலமாக விளங்குகிறது.

—உலகப்பன்

---

❀ பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் 'பாரதிதாசன் துணை' என்று மேலே குறிப்பிட்டே எதையும் எழுதத் தொடங்குவார்.

FREE E - BOOKS , www.thamizhan.net.,

# ஆப்கானிஸ்தான்

இந்திய துணைக்கண்டத்திற்கு நுழைவாயில் ஆப்கானிஸ்தானம். இதன் கைபர் கணவாய் வழியே தான் தரை மார்க்கமாக மேற்கும் கிழக்கும் சந்தித்தன.

உலகின் மிக ஏழைநாடுகளின் இதுவும் ஒன்று. எழுதப்படிக்கத் தெரிந்தோர் 23% சராசரி ஆயுள் 37 வயது பிறக்கும் குழந்தைகளில் பாதி 5 வயதுக்குள் இறக்கும் அவலம்! 12% நிலமே சாகுபடிக்கு ஏற்றது; என்னும் 70% மக்கள் விவசாயிகள்.

கி. மு. 5 ஆம் நூற்றாண்டு முதல் பாரசீகர், கிரேக்கர், மௌரியர், துருக்கியர், அரேபியர், மங்கோலிய செங்கிஸ்கான், பிரிட்டிஷார் கடைசியாக ரஷ்யர் இந்நாட்டில் ஆதிக்கம் செலுத்தியதன் வாயிலாக, பல வகை இனங்கள் இங்கு உருவாகிவிட்டன. பாதிமக்கள் பட்டானி இனத்தவர். 25 லட்சம் மக்கள் நடோடி வாழ்க்கையினர். இவர்களில் ஒரு பகுதியினரே பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் வந்து தொழிலாளிகளாகவும், வட்டிக்குக்கடன் தருபவர்களாகவும் ('சீட்டிக்காரர்கள்', காபூலிவாலா) வாழ்கின்றனர்.

ஏறத்தாழ 1.5 கோடியக்களில் 99% இசுலாமியர். கல்வி முல்லாக்கள் எனும் மதத்தலைவர்கள் கையில் உள்ளது. வெளிநாட்டவர்கள் கல்விக் கூடம் நடத்தத்தடையுள்ளது! அனுமதியுடன் நடத்தினாலும் ஆப்கானியர்களுக்குச் சொல்லித்தர முடியாது. எல்லா மட்டங்களிலும் கல்வி இலவசம். 1959 இல் பெண்கள் முகத்திரையிடல் கட்டாயமில்லை என்ற சட்டம் வந்தும்; முகத்திரையுடன் காணப்படும் பெண்களே மிகுதி. பல வீடுகளில் பெண்கள் வீட்டை விட்டே செல்ல அனுமதிக்கபபடுவதில்லை. 1964 இல் பெண்களுக்கு ஓட்டுரிமை வந்தும், நகருக்கு வெளியே உள்ள பெண்கள் ஓட்டுப்போடுவதில்லை சில பகுதிகளில் மனைவியர் ரூ 80 க்குக் கூட விற்கப்படுகின்றனர். ஆண் ஆதிக்கம் தாண்டவமாடும் நாடு. 6, 52, 090 கி. மீ. பரப்புள்ள இந்நாட்டில் புஷ்டு, டாரி (பாரசீகம்) ஆகிய மொழிகள் தேசிய மொழிகள். தலைநகர் காபூலின் மக்கட்தொகை 20 லட்சமே.

*இனப்பிரிவுகளும், புவியியலும் இந்நாட்டின் பலவீனங்கள். எனினும் இந்நாடு தனி சுயசார்பை இழக்காமலிருக்க போராடியே வருகிறது. 1747 இல் அகமது ஷா டுராணி தலைமையில் சுதந்திர முடியரசானது. சென்ற நூற்றாண்டில் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே நடந்த தாக்குதல்களுக்கு உள்ளாகியது. 1921 இல் பிரிட்டனின் பிடியிலிருந்து விடுதலை பெற்றது. 1973 இல் மன்னர் ஜாகீர் ஷாவின் முடியாட்சி புரட்சியால் நீக்கப்பட்டு முகமது தாவூது குடியரசு தலைவரானார். 5 ஆண்டுகளின் இவர் கொல்லப்பட்டு 1979 இல் சோவியத் ஆதரவு அரசு பதவிக்கு வந்தது. பின் ஏற்பட்ட புரட்சிகளையும், குழப்பங்களையும் சமாளிக்க சோவியத் உதவியை ஆட்சியாளர்கள் நாடினர், 1979 டிசம்பரில் 1, 15, 000 சோவிய படைகள் உள்ளே நுழைந்தன. சோவியத் எதிர்ப்பு கொரிலாக்கள்—இஸ்லாமிய பழமை வாதிகள் அமெரிக்க, பாக்கிஸ்தான் ஆயுத உதவி பெற்று சோவியத் படைகளுக்கு எதிராகப் போராடினர். 9 ஆண்டு போராட்டத்தில், மூன்றில் ஒருவர் அகதியாயினர். 10 லட்சம் ஆப்கானியரும் 20, 000 சோவியத் வீரர்களும் கொல்லப்பட்டனர். மூன்றிலொரு பங்கு விளை நிலங்கள் போர்க்களமாகி உணவு உற்பத்தி பாதியானது.*

*கோர்பச்சேவ் பதவியேற்றபின், இரத்தக்களரியை முடிவுக்குக் கொண்டுவர ஏப்ரல் 88 இல், ஐ.நா சபை முன்னணியில் ஜெனிவாவில் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி 15-2-89 குள் சோவியத் படைகள் வெளியேறின.*

—உலகப்பன்

(அடுத்தது: ஈரான்)

FREE E - BOOKS , www.thamizham.net.,

## பணக்காரர்கள் இப்படி வாழ்கிறார்கள்!

எல்லாச் செலவுகளும் போக, கையில் எஞ்சியிருக்கக் கூடிய வருவாய் ஆண்டுக்கு ரூ 40,000 க்கு மேல் வைத்திருக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை 12 கோடி! அதாவது இங்கிலாந்தின் மக்கட்தொகை மாதிரி இருமடங்கு! கடந்த 10 ஆண்டுகளில் இந்தப்புதுப் பணக்காரர்களின் தொகை இருமடங்காகியுள்ளது.

இவர்களில் பெரும்பாலோர் தங்களை நடுத்தர வர்க்கம் என அழைத்துக்கொண்டு, விலைவாசி உயர்வைப்பற்றி நீலிக்கண்ணீர் வடிப்பார்கள், ஆனால் உண்மையில் நாட்டில் பணவீக்கம் ஏற்பட்டு, விலைவாசி கடந்த 30 ஆண்டுகளில் 5 மடங்காக உயர்ந்து, இன்னும் அதிவேகமாக உயரப் போவதற்கும் இவர்களே காரணம்.

இந்த உண்மையை நடைமுறையில் பார்க்க வேண்டுமாயின் மாருதி காரின் விலை ரூ 50,000 ஆக இருந்த போது நீண்டிருந்த காத்திருப்போர் பட்டியல், தற்போது ரூ 90,000 ஆகியுள்ளபோது, கூடியுள்ளதே தவிர குறையவில்லை. ரூ 2 லட்சம் விற்கும் கன்டசா காருக்கு ஓராண்டுக்குக் காத்திருக்கும் கூட்டம் இருக்கிறது. தங்கம் விலை உயர்ந்தாலென்ன, பட்டுப்புடவை ஐயாயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டால் என்ன, வண்ணத் தொலைக்காட்சியும்,குளிர்ப் பெட்டியும் விலை ஏறிக்கொண்டே போனால் என்ன- எங்காவது இவை விற்கும் கடைகளில் விலை உயர்வால் கூட்டம் குறைவதைப் பார்த்திருக்கிறீர்களா?

ஒவ்வொரு ஆண்டும் ரூ 3,50,000 கோடி ரூபாய் நாட்டுக்கு வருவாய் வருகிறது. இந்த வருவாயின் 50 % ஐ இந்த 20 % குட்டி, பெரிய பணக்காரர்களே அனுபவித்து வருகிறார்கள். அதிலும் 5 % பெரிய பணக்காரர்கள் 22 % தேசிய வருவாயை விழுங்கி வருகின்றனர். உலகில் பல பணக்கார நாடுகளை விட இந்தியாவில் இந்தப் பாரபட்சம் மிகுதி.


வணிகர்களும், ஒன்றிணையக் கூடிய வாய்ப்புப் பெற்றுத். தங்கள் வருவாயை விலைவாசிகளுக்கு ஏற்ப உயர்ந்த முடிந்தவர்களும் இங்கே சுகவாழ்வு வாழ முடிகிறது. மூட்டையிலிருந்து சிதறிய நெல்லிக்காய்களாய் வாழும் பெரும்பான்மை மக்கள், அடிப்படை தேவைகளைக் கூடப் பெறமுடியாமல், விலைவாசிக்கும் வருவாய்க்கும் தொடர்பின்றி மேலும் மேலும்ஏழையாகி வருகிறார்கள்!

—ஸ்டெனிஸ்லாஸ்

❀ 31-12-88 கணக்குப்படி இந்தியாவில் மக்கட்தொகை 80 கோடி!

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மனித உடலின்விலை?



மனித உடலை விடப் பெரிய அதிசயம் என்ன இருக்கிறது.? இதன் ஆற்றல் எவ்வளவு மகத்தானது? மனித உடலைப்பற்றிய உண்மைகள் இவை:

மனித உடலிலுள்ள இரத்தக் குழாய்களை ஒன்றாகச் சேர்த்து வைத்தால் 50, 000 மைல்களுக்கும் மிகுதியாக இருக்கும். மனித உடலில் உள்ள இரத்தத்தின் அளவு 6 லிட்டர்

நம் உடம்பிலுள்ள நரம்புகளை வெளியே எடுத்து அளந்தால் ஏறத்தாழ 45 மைல் தூரம் வரும். வயிற்றிலுள்ள குடல்களின் நீளமோ 26 அடி, அரிசி உணவை இக்குடல் 60 நிமிடங்களிலும், முட்டையை 180 நிமிடங்களிலும் செரித்து இரத்தத்தில் கலக்க வைக்கிறது.

நம் நுரையீரலில் 72, 50, 00, 000 அறைகள் உள்ளன. 24 மணிநேரமும் நாம் சுவாசிக்கும் காற்றின் அளவு 438 கன அடி. ஒரு நாளைக்கு 23,040 தடவை நாம் மூச்சு விடுகிறோம்.

நம் தோலின் ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் 90 எண்ணெய்ச் சுரப்பிகள் உள்ளன. ஒவ்வொரு சதுர அங்குல தோலிலும் 60 ரோமங்களும், 625 வியர்வைச் சுரப்பிகளும் 19 மில்லியன் செல்களும் உள்ளன. தலையில் உள்ள முடிகளின் எண்ணிக்கையோ 1, 20, 000

22 மி. மீட்டர் அளவே உள்ள நம் கண்களைக் கொண்டு 17, 000 விதமான நிறங்களை நாம் பிரித்துணர்கிறோம். சுவையறிய நாக்கில் 3000 சுவை மொட்டுகள் உள்ளன.

மனித உடலிலுள்ள பாஸ்பரசைக் கொண்டு 2,220 தீக்குச்சிகளைச் செய்ய முடியும். கார்பனை வைத்து 9. 000 பென்சில்கள் தயாரிக்க முடியும்.

செயற்கையாக இப்படி ஒரே ஒரு மனித உடலை உருவாக்க வேண்டுமாயின் 4½ கோடி ரூபாய் செலவாகும். இவ்வளவு செலவிட்டும் உயிர்தர முடியாது.

– சித்தன்

---



❁ இன்று உலகில் நிமிடத்திற்கு 100 பேர் இறக்கின்றனர். மணிக்கு 6000 பேரும் ஒரு நாளைக்கு 1, 44, 000 பேரும் இறக்கின்றனர். இது ஐ நாவின் அதிகாரப்பூர்வமான கணக்கு.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சர்க்கரை விலை உயர்வுக்குக் காரணம்

உலகத்தில் சர்க்கரை மிக அதிகமாக உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று எனினும் சர்க்கரைத் தட்டுப்பாடு; கள்ளமார்க்கெட்டுகளில் விஷவிலை; இயற்கைப் பஞ்சத்தை விடத்திட்டமிட்டு செய்யப்படும் செயற்கைப் பஞ்சமே இங்கு நம்மை வதைக்கிறது!

அண்மையில் வெளிநாட்டிலிருந்து மிகுந்த விலையில் - (டன் ஒன்றுக்கு 560 டாலர்) சர்க்கரை இறக்குமதி செய்ததே, இந்த விலை உயர்வுக்குக் காரணம் எனத் தெரிகிறது. உரிய நேரத்தில் விரைந்து இறக்குமதி செய்யாமல் அரசு தாமதித்ததால் 20 மில்லியன் டாலர்கள் மிகுதியாக விலை கொடுக்க வேண்டியதாயிற்று. ஏராளமான அந்நிய செலாவணி சீரழிந்தது!

அமெரிக்காவில் உள்ள இந்தியர்களால் நடத்தப்படும் "வீல் இண்டர்நாஷனல்" என்ற நிறுவனம் இந்தச் சர்க்கரை இறக்குமதியில் இடைத்தரகு செய்திருக்கிறது. இந்நிறுவனம் சர்க்கரை வாணிகத்துறையில் கேள்விப்படாத நிறுவனம்; மேலும் இறக்குமதி செய்வதற்கு உரிய அடிப்படை தேவையாக மாநில வணிகக் கழகத்தில் (S T C) தன் பெயரை இந்நிறுவனம் பதிவு செய்து கொள்ளக் கூட இல்லை இந்த நிறுவனத்தின் மேல் அரசுக்கு அப்படி என்ன அக்கறை?

மத்திய உணவுத் துறை அமைச்சர் சுக்ராம். செப்டம்பர் 21- ஆம் தேதி பாராளுமன்றத்தில் 517 முதல் 519 டாலர் வரையிலான விலையில் 5 லட்சம் டன் மட்டும் அவசரத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டதாக விவரம் (பொய்த்தகவல்?) அளித்த போது எதிர்க்கட்சிகளும், இதழ்களும் காட்டமாக விமர்சித்தன.

தற்போதுள்ள சூழலில் மேலும் அரசு இறக்குமதி செய்திருக்கக் கூடுமென்பதால் ரூ 133 கோடி ரூபாய் வரை (180 மில்லியன் டாலர்) இந்த இறக்குமதியில் நட்டப்பட்டிருக்கும் என நிபுணர்கள் கணிக்கிறார்கள். இந்த நட்டம் யாருடைய லாபத்திற்காக?

ரூ 9 க்கும் ரூ 10 க்கும் நியாய விலைக்கடையில் சர்க்கரை வருமா என்று ரேஷன் அட்டையையும் பையையும் வைத்துக் கொண்டு தேவுடு காப்போம் வாரீர்! பாமரனுக்கு இவையெல்லாம் புரியவா போகிறது?

-கார்த்திக்


---

❁ பெண்களுக்கு வாக்குரிமை கொடுத்த முதல் நாடு நியூசிலாந்து

FREE E-BOOKS , www.thamizham.net.,

நாம் அறியவேண்டியவர்கள்:

## டாக்டர். சி. டி. கே. சாரி



நம்மிடையே வாழும் மிகப் பெரிய சிந்தனையாளர்களை நாம் உணர்வதில்லை. வாழ்ந்தபின் சிலை வைப்போம். அஞ்சல் தலை அடிப்போம். இப்போதே கூர்மையாக இம் மனிதரைக் கவனியுங்கள்:

டாக்டர் சி. டி.. கே. சாரி சுமார் 40 ஆண்டு காலம் சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியில் பணியாற்றியவர். ஓய்வு - பணியிலிருந்து தான். ஆராய்ச்சியிலிருந்து அல்ல. "காலத்தின் தத்துவப் பிரச்சனை"யை ஆய்ந்து டாக்டர் பட்டம் பெற்றார்.

சம்பிரதாய மதம், சாதி இவற்றையெல்லாம் கடந்து வெகு தூரம் வந்தவர். இந்தியாவில் புலன் கடந்த உளவியல் (Para- Psychology) துறையில் ஆய்வு நோக்குடைய மிகச்சிலரில் ஒருவர். உயிரியல், மரபியல் (Genetics) முதலியவற்றில் ஆழ்ந்த பயிற்சி பெற்றவர். ஆயினும், "இவை எனக்குப் பொழுது போக்கு தொழில் விஞ்ஞானத்தின் தத்துவம்" என்கிறார்.

இன்று உலகின் முக்கிய தத்துவ ஞானிகளில் ஒருவராக இவர் கருதப்படுகிறார். அண்மையில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் நடந்த புலன் கடந்த உளவியல் மாநாட்டிலும், ஹாலந்தில ஒரு மாநாட்டிலும் இவரது கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. ஆம் வாசிக்கப்பட்டன! ஏனெனில் இவர் வெளி நாடுகளுக்குச் சென்றதே இல்லை.

புலன்கடந்த உளவியலின் தந்தையான ஜே.பி. ரைன் இவரை அமெரிக்காவுக்கு அழைத்தும் கூட வரமறுத்து விட்டார். சென்னை தாம்பரத்தில் உள்ள இவரது அமைதியான இல்லத்தில் இவரது ஆய்வுகளும், தேடுதல்களும் தொடர்கின்றன.

70 வயதைக் கடந்து நிற்கும் இப்பேராசிரியரைப் பேட்டி கண்டேன். ஓர் இளைஞனின் ஆர்வம், ஆழ்ந்த ஞானம், கூர்மையான நகைச்சுவை, தன்னடக்கம், நேசபாவம் இவை தாம் இந்த மனிதர். அறிவியல் நேர்மையுடன் இவர் மறுபிறவி, ஆவிஉலகம் மரணத்துக்குப்பின் மனிதர்நிலை, மதம், மகிரிஷி மகேஷ்யோகி, சாயிபாபா, கோஹூர், ஜே கே—பற்றி நிறைய பேசினார்- அவை புதிய சிந்தனையைத் தோற்றுவிக்கும்! இவற்றை அடுத்த இதழில் எதிர் பாருங்கள்.

—ரமேஷ்

❀ **திருமணம் செய்து கொள்ளாத ஆண்பெண்களுக்கு வரி விதிக்கும் நாடு சோவியத் யூனியன்**

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மனுவின் சிலை அகற்றப் படுமா?

துர்நாற்றம் வீசும் இன்றைய சாதிக் கொடுமைகளுக்கும், பெண்ணடிமைத் தனத்திற்கும் வித்திட்ட நூல் "மனு தர்ம சாஸ்திரம்" இதனை எழுதிய மனுவிற்கு ராஜஸ்தான் உயர்நீதிமன்ற வளாகத்தில் முழு உருவச்சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்களின் பல அமைப்புகளும், இந்தியக் குடியரசுக் கட்சி உட்பட பல இயக்கங்களும் சிலையை அகற்ற வேண்டுமெனக் குரல் எழுப்பிய தோடு, ரிட் மனுக்களும் அளித்துள்ளன.

எனவே உயர்நீதி மன்றத்தின் முழு பெஞ்ச் சிலையை அகற்றச் சொல்வது எனத்தீர்மானித்தது. இச்சிலையை நிறுவிய ஜூடிஷியல் ஆபீஸர்ஸ் அஸோசியேஷனிடமும், லயன்ஸ் கிளப்பிடமும் நீதிமன்றப்பதிவாளர் இதனை அறிவித்தார்.

ஆனால் இந்தத் தீர்ப்புக்கு எதிராக சமர்ப்பிக்கப் பட்ட ஒரு ரிட்மனுவைத் தொடர்ந்து ஜஸ்டிஸ் மகேந்திர துஷன் சர்மா சிலையை அகற்றுவதற்குத் தடைவிதித்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

"மனு, இந்துக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஆதரிக்கும் ஒரு வேத விற்பன்னர். அவரை அவதிக்கும் செயலைப் பெரும்பாலான இந்துக்கள் விரும்ப மாட்டார்கள். சிலை ஸ்தாபித்தபின் அகற்றும் உரிமை நீதிமன்றத்திற்கு இல்லை" என்று ரிட்மனு சமர்ப்பித்த ஆச்சாரியா குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் மனுவின் சிலையை அகற்றியே தீர வேண்டும் என்பதில் தாழ்த்தப்பட்டோரின் அமைப்புகள் உறுதியோடு நிற்கின்றன. "மனுவுக்கு சிலை வைப்பது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் தூய நோக்கங்களுக்கு எதிரானது. இந்துச் சமுதாயத்திலுள்ள இன்றைய அனைத்துத் தீமைகளுக்கும் காரணம் மனுஸ்மிருதிதான்". என்று அம்பேத்கார் விச்சார் மஞ்சின் வழக்கறிஞர் அழுத்தமாகக் கூறினார்.

ஜஸ்டிஸ் சர்மாவின் தடை உத்தரவைத் தொடர்ந்து நீதிமன்ற வாசலில் தர்ணா மற்றும் எதிர்ப்புப் போராட்டங்களும், கோஷங்களும் வலுத்து வருகின்றன.

அகற்றப்பட இருப்பது மனுவின் சிலையா, அல்லது மக்களின் போராட்டமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

நன்றி: சமரசம்

❁ வாழ்நாளில் முதல் பாதியை ஆணாகவும், பின் பாதியைப் பெண்ணாகவும் மாற்றிக் கொள்ளும் உயிரினம் நத்தை.

FREE E - BOOKS , www.thamizham.net.,


## லெபனானிலிருந்து வந்த மின்னல்கள்



இன்றைய பெரும்பாலான புதுக் கவிஞர்களுக்கு ஆசான் லெபனானிலிருந்து புறப்பட்டு வந்த கவிஞன் கலீல் கிப்ரான்! நம் பாரதியின் சம காலத்துக் கவிஞன். உருவகக் கதைகளை வெறும் நீதிக் கதைகள் என்ற மரத்தளத்திலிருந்து, கலைப்படைப்பு என்ற பொன் தளத்திற்கு மாற்றம் செய்த அற்புதக் கவிஞன். ஒவ்வொரு வரியிலும் தனது இலக்கிய ஆளுமையை நிறுவிய இக்கவிஞரின் படைப்புகள் சில:-

### கூண்டுகள்

என்னுடைய தந்தையின் தோட்டத்தில் இரண்டு கூண்டுகள் இருக்கின்றன
ஒன்றில் சிங்கம் இருக்கிறது
மற்றொன்றில் சிட்டுக்குருவி இருக்கிறது
ஒவ்வொரு நாள் காலையிலும் சிட்டுக்குருவி சிங்கத்தைப் பார்த்துச் சொல்கிறது
"என் சகோதரக்கைதியே! வணக்கம்"



### பொம்மை



சோளக் கொல்லையில் நின்று கொண்டிருந்த துணிப்பொம்மையிடம் நான் சொன்னேன்:
"இங்கே தனியா நின்று கொண்டிருப்பது எரிச்சலாக இல்லை"
அது சொல்லியது:
"இல்லை பிறரை பயமுறுத்துவதில் கிடைக்கும் சுகம் அலாதியானது: ஆழமாது"
சிறிது நேரச் சிந்தனைக்குப்பின் நானும் சொன்னேன்:
"உண்மை தான். நானும் இதைக் கண்டிருக்கிறேன்"
பொம்மை சொல்லியது:
"வைக்கோலைத் திணித்துக் கொண்டவர்கள் மட்டுமே அதை அறிய முடியும்"
அது என்னைப் பாராட்டியதா? ஏளனம் செய்ததா? என்று எனக்குத் தெரியவில்லை
ஓராண்டு கழிந்தது
இப்பொழுது அந்த பொம்மை தத்துவ ஞானியாக மாறியிருந்தது.
அதன் தலையில் இரண்டு காக்கைகள் பயமின்றி கூடு கட்டிக் கொண்டிருந்தன.

தமிழில்: என். ஆர். தாசன்

இஒரு மொழிக்குத் தாயும் தந்தையும் கவிஞனே—க. கிப்ரான்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

புத்தகப் பிழிவு:

# பாரதியின் ஞானகுரு நிவேதிதா



[டி. ராஜசேகர், வெளியீடு ஜனனி, C/o. பு. ராஜசேகரன் 52. பெத்த நாயக்கன் தெரு, மின்ட், சென்னை-600079 பக் 72 விலை- ரூ 5]

"மார்க்ரெட் எலிசபெத் நோபல்" என்பது நிவேதிதாவின் இயர்பெயர் 1867 ஆம் ஆண்டு அயர்லாந்தில் பிறந்தார். மார்க்கரெட்டின் தந்தை சாமுவேல் கிறித்துவ போதகர்.

விவேகானந்தரின் லண்டன் சொற்பொழிவுகளின் விளைவாக, 1898 இல் கல்கத்தாவிற்கு மார்க்ரெட் வந்தார். மார்க்ரெட்டிற்கு விவேகானந்தர் நிவேதிதை என்ற பெயரைச் சூட்டினார். இதன் பொருள் "அர்ப்பணம்" என்பதாகும்

**சகோதரி நிவேதிதாவின் கேள்வி;** குழந்தைகளுக்கான பள்ளிக் கூடம் நடத்த விரும்புகிறேன். அதை எப்படி நடத்துவது சிறப்பானது?

**குருநாதன் விவேகானந்தர் பதில்:** அதை நீ பள்ளிக் கூடத்துக் குழந்தைகளிடமிருந்தே கற்றுக் கொள்வாய்!

தடை செய்யப்பட்ட வந்தே மாதரம் பாடலைத் தம் பள்ளியில் தினமும் பிரார்த்தனை பாடலாக பிள்ளைகளைப் பாடச் செய்தார் நிவேதிதா

"என் மகளுக்கு ஐரோப்பிய கல்விமுறைப்படி ஆங்கிலக் கல்வி கற்றுத் தர வேண்டும்" என்று கேட்ட தாகூருக்கு, அவ்வாறு அந்நிய கல்வி தர மறுத்ததோடு இந்திய முறைப்படி மட்டுமே கற்றுக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்பதை அறிவுறுத்தினார்.

பாரதி நிவேதிதாவைக் கல்கத்தா காங்கிரஸ் மாநாடு நடக்கும் போது சந்தித்தார்! இந்தச்சந்திப்பே அவரது வாழ்வின் திருப்பு முனை, பாரதிக்கு வயது 23 அப்போது நிவேதிதா மிகுந்த உணர்ச்சியுடன்-

"பாரதத்தாய் விலங்குகளோடு கண்முன் நிற்ப தாய் காணும் அளவுக்கு உணர்ச்சி வேண்டும்; அப்படிக் கண்டால்தான் விலங்கை எப்படியாவது நீக்க வேண்டும் என்ற உணர்வுவரும்" என்று கூறினாராம்.

இப்படிக் கூறிவந்த அம்மையார் திடீரென ஆவேசம் வந்தவர்போல தமது மேலங்கியை மார்பெதிரே பிய்த் தெறிந்து "உங்களுக்குத் தைரியம் வேண்டும்; எங்களை இங்கே குத்திக்கொல்ல உங்களுக்குத் தைரியம் வேண்டும்" என்றாராம்.

பாரதி, நிவேதிதா சந்திப்பைப்பற்றி, செல்லம்மாள் பாரதியிடம் ஆனந்தக் களிப்புக் கொண்டு "சொன்ன சொல் ஏதென்று சொல்வேன்" என்ற பாடலைப் பாடியுள்ளார்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நாமக்கல் கவிஞரை அவமதிக்கலாமா?

மத்திய அஞ்சல் துறை 19-10-89 அன்று நாமக்கல் கவிஞர் அஞ்சல் தலையைக் கடன் எழுவுக்கு வெளியிட்டிருக்கிறது.

அஞ்சல் தலையில் 'நாமக்கல் கவிஞர்' என்பது இந்தியில் 'நமக்கல் கவிஞர்' என்று அச்சிடப் பட்டுள்ளது. அஞ்சல் தலை தவிர முதல் நாள் அஞ்சல் உறைகள், அஞ்சல் தலை அடங்கிய வெளியீடு அனைத்திலும் 'நமக்கல் கவிஞர்' என்றே காலை ஒடித்துத் தமிழ் நாட்டுக் கவிஞனைக் களங்கப்படுத்தியிருக்கிறார்கள்!

அஞ்சல் தலையில் போய் அச்சுப்பிழை இருக்க முடியாது- ஒன்றுக்குப் பத்து முறை சரிபார்த்தே அச்சிடுகிறார்கள். இது அச்சுப்பிழையல்ல, அடாவடித்தனம்! இந்தியும் தமிழும் நன்றாக தெரிந்தவர்களை வைத்துப் பெயரைச் சரிபார்க்க வேண்டும் என்ற அடிப்படை அக்கறை இந்த அரசுக்கு இல்லை. இந்தியைக் கசடறக் கற்ற தமிழர்கள் ஆயிரக்கணக்கில் மலிந்திருக்கிறார்களே! யாராவது ஒருவரிடம் காட்டி சரிபார்க்கச் சொல்லும் முயற்சி கூட எடுக்கப்படவில்லை என்பது எதைக்காட்டுகிறது ?

தெற்கையும் தமிழ் நாட்டையும் பற்றிய அக்கறையின்மைக்கு இது மேலும் ஓர் எடுத்துக்காட்டு. 5 கோடி தமிழர்களை மட்டுமல்ல, மற்ற 3 மாநிலங்களில் வாழும் தென்நாட்டுச் சகோதரர்கள் அனைவரையும் இன்றும் கூட வேறுபடுத்தத் தெரியாமல் மதராசிகள் என்று அழைக்கும் இந்திக்காரர்களுக்கு நமது வரலாற்று, புவியல், இலக்கிய நிலைமைகள், பற்றிய அறிவு இன்னும் சூன்யமாகவே இருக்கிறது (நமக்குமட்டும்தாம் வட இந்தியா கட்டாயப்பாடம்;) இச் சூழலில் மகாக் கவி பாரதியைப்பற்றியே அறியாத இந்திக் காரர்களுக்கு நமக்கல் கவிஞரென்றால் யாரென்று புரியப்போகிறது! ஓர் இந்திக் கவிஞனை இப்படித்தவறாக மத்திய அரசு குறிப்பிட்டால் அங்கு சும்மா விடுவார்களா?

அனைத்திந்திய விடுதலைக்காக முழங்கிய ஒரு தேசிய கவிஞனை இப்படி தவறாக அறிமுகப்படுத்தி விட்டு' மறுபக்கம் தேசியம் தேசியம் என்று வாய் கிழியப் பேசினால், தமிழர்கள் தேசியத்தைக் கண்டு எள்ளி நகையாட மாட்டார்களா?

-எழில்

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி: நவம்பர்: 89: பதிவுஎண் TN/ MS (N) 317

## ஜோதிர்லதா கிரிஜாவிடம் கேள்வி:

**கே: சாதிகளை ஒழிக்க வேண்டியிருக்க சாதிகளின் பெயரால் சலுகைகளை ஏன் வழங்க வேண்டும்? வழங்கினாலும் அவற்றுக்கு ஒரு காலவரையறை வேண்டாமா?**

சாதி அடிப்படையில் சலுகை கூடாது என்கிறவர்கள் கூட, தங்கள் சாதிக்காரர்கள் பின்னுக்குத்தள்ளப்படக் கூடாது என்ற சாதிப்பற்றினால்தான் அவ்வாறு குமுறுகிறார்களே தவிர, சாதிகள் ஒழிய வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையால் அன்று.

தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும், சாதிப் பெயர்களால் அழைக்கப்பட்டு வரும் நிலையில், சாதிகளின் அடிப்படையில்தான் அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டாக வேண்டும்.

காலங்காலமாக அமுக்கப்பட்டுள்ளவருக்குக் கடந்த 30 ஆண்டு காலமாக மட்டுமே வழங்கப்பட்டு வரும் சலுகைகளுக்குரிய காலக்கெடுவை இப்போதைக்கு முடிக்க முடியாது. அது நியாயமே அல்ல.

படித்த பெற்றோருக்குப் பிறந்தபிள்ளைகளைப் பெற்றோர் கல்வி விஷயத்தில் கவனிப்பது சாத்தியமாகிறது. இந்த வசதி படிக்காத பெற்றோரைக் கொண்ட பின் தங்கிய பிள்ளைகளுக்குச் சிறிதும் இல்லை. பையன் புத்தகத்தைத் தலைகீழாக வைத்துப் படித்தாலும் தெரிந்து கொள்ளாத பெற்றோர் நிறைந்த நாடு இது. இந்தப் பிள்ளைகளையும், உயர் வகுப்பினரின் பிள்ளைகளையும் சமமாகப் பாவிப்பது நியாயமாகாது. இதனால் கல்விநிலையங்களிலும், வேலைகளிலும் இவர்களுக்கென்று ஒதுக்கீடு செய்தே ஆகவேண்டியதிருக்கிறது.

பிறரின் உயிர், நலம், நாட்டின் மிகப்பெரிய நலம் ஆகியவை பாதிக்கப்பட்டு விடக் கூடிய ஆபத்து இருக்கும் பதவி உயர்வுக்கு மட்டுமே இந்த ஒதுக்கீட்டு மறுப்புப்பொருந்தும்; திறமைக் குறைவு எங்கே பெரிய தீங்கை விளைவிப்பதில்லையோ அங்கே மட்டுமே இட ஒதுக்கீடு செய்யலாம். மற்றவற்றில் இல்லை.

அனைத்து அஞ்சல் தொடர்புகளுக்கும்:
"சுட்டி"
அஞ்சற்பெட்டி எண்: 6888 சென்னை - 600 040
**ஆண்டுச் சந்தா : ரூ 12/-**
எந்த மாதமும் சந்தாதாரராகலாம்
**ஆயுள் சந்தா. ரூ 200/-**

http://www.thamizham.net. FREE E - BOOKS (TAMIL);
FREE E - BOOKS , www.thamizham.net.,